செய்தி வெளியீடு எண்: 169 நாள்: 27.02.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.2.2019) தலைமைச் செயலகத்தில், சென்னை, காமராஜர் சாலையில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தின் அருகில் 2 கோடியே 52 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு வளைவினை திறந்து வைத்தார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் உயரிய பண்பினையும், சிறப்பினையும் நினைவுகூறும் வண்ணம் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவினை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு முழுவதும் மிகப்பிரம்மாண்டமாக சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவானது, 30.6.2017 அன்று மதுரையில் தொடங்கப்பட்டு, 30.9.2018 அன்று சென்னையில் நிறைவு பெற்றது. இவ்விழாக்களின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 5,744 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3,214 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 5,158 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற 2,370 புதிய திட்டப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன. மேலும், 5,475 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 8,31,527 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இவ்விழாக்களில் அந்தந்த மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் புதியதாக 568 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டன.

பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், வள்ளல் பெருமான் என்றெல்லாம் மக்களால் போற்றிப் புகழப்பட்ட மறைந்த முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களது நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, சென்னையில் பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவாக நூற்றாண்டு விழா வளைவு அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கடந்த 28.6.2017 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, 23.8.2018 அன்று காலை, சென்னை, காமராஜர் சாலையில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தின் அருகில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு வளைவிற்கு, மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு.ப.தனபால் அவர்கள் தலைமையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு வளைவு அழகிய கலை நயத்துடன் கூடிய வேலைப்பாடுகளுடனும், அன்னாரின் சிறப்பை வலியுறுத்தும் அடையாளச் சின்னமாக 66 அடி அகலம் மற்றும் 52 அடி உயரத்துடன் வண்ணப்பூச்சுகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவை போற்றும் வகையிலும், எதிர்கால சந்ததியினர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மாண்பிணையும், பெருமைகளையும், அன்னார் ஆற்றிய தொண்டினையும் நினைவு கூறத்தக்க வகையிலும், அவருடைய புகழ் மக்கள் மனதில் தொடர்ந்து நிலைத்திருக்கும் வகையிலும், தமிழ்நாடு அரசால் சென்னை, காமராஜர் சாலையில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தின் அருகில் 2 கோடியே 52 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு வளைவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு.எஸ். மனோகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 27.2.2019**